# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தர நிலையறி பரீட்சை – 2021

**தரம் :- 13(2021)** **(புதிய பாடத்திட்டம்)** **நேரம் :- 3 மணித்தியாலம்**

**இந்திய வரலாறு - II (பகுதி I)** **25A/T/II**

- மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடங்கள்
- வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

***இந்திய வரலாறு :- ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை*** **பெயர் / சுட்டெண் :- …………………**

**அறிவுறுத்தல்கள்**

❖ இப்பகுதி 40 வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் இந்த வினாத்தாளிலேயே விடை எழுதுக.

❖ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள ஐந்து தெரிவுகளில் ஒன்று மட்டுமே சரியானது. அந்தச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடையைக் குறிக்குக.

❖ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதிய பின்னர் பகுதி I இன் விடைத்தாள்களை பகுதி IIஇன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

❖ **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் எனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனம்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. (1) ஹெரடோரஸ் (2) ஐஸ்டின் (3) மெகஸ்தனிஸ் (4) தாரநாத் (5) புளுடாக் ( )

02. (1) சட்லெஜ் (2) ராவி (3) சாம்பல் (4) செனாப் (5) பீயஸ் ( )

03. (1) ராஜகிருகம் (2) சாஞ்சி (3) சம்பா (4) வரணாசி (5) கௌசாம்பி ( )

04. (1) குஷாண (2) ஹரியங்க (3) நந்த (4) சிசுநாக (5) மோரிய ( )

05. (1) தயா ராம் சாணி (2) மோதிமர் வீலர் (3) ஏ.எவ்.பஷாம்
(4) ஜோன்மார்ஷல் (5) எஸ்.ஆர்.ராவோ ( )

06. (1) மேகதூதம் (2) ஹர்சசரிதம் (3) ரகுவம்சம் (4) சாகுந்தலம் (5) விக்கிரமோர்வசி ( )

07. (1) அச்சுதர் (2) நாகதத்தர் (3) உருத்திரதேவர் (4) கணபதிநாகர் (5) நீலராஜன் ( )

08. (1) முதலாம் ஆதித்தன் (2) முதலாம் பராந்தகன் (3) முதலாம் இராஜராஜன்
(4) ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் (5) முதலாம் குலோத்துங்கன் ( )

09. (1) சஸசாங்கன் (2) ஹர்ஷ வர்த்தனன் (3) தரம்பாலன்
(4) இரண்டாம் துருவசேனன் (5) இரண்டாம் புலிகேசி ( )

10. (1) சகர் (2) வாகாடகர் (3) குஷாணர் (4) இந்து – கிரேக்கர் (5) பார்த்தியர் ( )

❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியில் உள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாது உள்ளன. பொருந்தாத அச்சோடியை இனம்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 11. | 1) மஸ்கி கல்வெட்டு | அசோகன் | |
| | 2) காந்தார கல்வெட்டு | கனிஷ்கன் | |
| | 3) பிதாரி கல்வெட்டு | ஸ்கந்தகுப்தன் | |
| | 4) ஹதிகும்பா கல்வெட்டு | காரவேலன் | |
| | 5) ஐகோளே கல்வெட்டு | இரண்டாம் புலிகேசி | (   ) |
| 12. | 1) ராவி | சுலைமான் | |
| | 2) நர்மதை | விந்தியமலை | |
| | 3) காவேரி | நீலகிரி | |
| | 4) துங்கபத்திரை | மேற்கு மலைத்தொடர் | |
| | 5) தப்தி | சற்புத்திர மலைத்தொடர் | (   ) |
| 13. | 1) மிஹிராகுல | ஹூணர் | |
| | 2) நாகபாணன் | சகர் | |
| | 3) உருத்திரதாமன் | பார்த்தியர் | |
| | 4) முதலாம் உருத்திரதேவன் | வாகாடகன் | |
| | 5) வீம கட்பீஸஸ் | குஷாணர் | (   ) |
| 14. | 1) தண்டி | தசகுமாரசரிதம் | |
| | 2) பாரவி | சிசுபாலவடம் | |
| | 3) ஆரியப்பட்டர் | பிருஹத்சம்ஹிதம் | |
| | 4) விஷ்ணுவர்மன் | பஞ்சதந்திரம் | |
| | 5) விசாகதத்தர் | முத்திரா ராக்ஷசம் | (   ) |
| 15. | 1) ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் | மதுரை | |
| | 2) 2ஆம் புலிகேசி | வாதாபி | |
| | 3) முதலாம் தைலர் | கலியாணி | |
| | 4) ஹர்ஷ வர்த்தனன் | தானேஸ்வரம் | |
| | 5) முதலாம் சதகர்ணி | பிரதிஸ்தான் | (   ) |

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X,Y நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளன. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக் குறியினுள் எழுதுக.**

16 X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | வருணன் | A | நெருப்புக்கு அதிபதி |
| 2) | சோமன் | B | காலைப் பொழுதுக்கு அதிபதி |
| 3) | உஷா | C | நாளுக்கு அதிபதி |
| 4) | சூரியன் | D | நீருக்கு அதிபதி |
| 5) | அக்கினி | E | சந்திரக் கடவுள் |

(1) DBEAC (2) DBECA (3) DEBCA (4) DEBAC (5) DEACB ( )

17 X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | கங்கை | A | ரூபார் |
| 2) | ராவி | B | மதுரை |
| 3) | நர்மதா | C | பாருகச்ச |
| 4) | வைகை | D | ஹரப்பா |
| 5) | சட்லெஜ் | E | படாலிபுத்திர |

(1) EDCBA (2) EDCAB (3) DBAEC (4) ECBAD (5) CAEDB ( )

18 X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | தஞ்சாவூர் பிரகதீஸ்வர் கோவில் | A | ஹெய்சாளர் |
| 2) | எல்லோராவில் கைலாசநாதர் கோவில் | B | சாளுக்கியர் |
| 3) | பதாமியில் விஷ்ணு மகாகோவில் | C | இராஷ்டிரகூடர் |
| 4) | வேலூரில் சென்ன கேஷவர் கோவில் | D | பல்லவர் |
| 5) | காஞ்சி மதங்கேஸ்வரர் கோவில் | E | சோழர் |

(1) DBAEC (2) ECBAD (3) ADCBE (4) BEDCA (5) CAEDB ( )

19 X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | இந்தியாவில் முதலாவது பகலவ மன்னன் | A | தோரமான |
| 2) | இந்தியா மீது படையெடுத்த ஹூணத்தலைவர் | B | குஜால கட்பீசஸ் |
| 3) | இந்தியாவின் முதலாவது குஷாண மன்னன் | C | கொண்டோபர்ணேஸ் |
| 4) | வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றிய கிரேக்க ஆட்சியாளன் | D | மாவுஸ் |
| 5) | தக்ஷசீலத்தின் முதலாவது சக மன்னன் | E | அலெக்சாண்டர் |

(1) BADCE (2) CABDE (3) CEDBA (4) CEBDE (5) CABED ( )

20 X Y

| X | Y |
|---|---|
| 1) சாகல | A பெஷாவர் |
| 2) சௌராஷ்டிர | B அலகபாத் |
| 3) இந்திரப்பிரஸ்தம் | C சியால்கோட் |
| 4) பிரயாக | D கத்தியவார் |
| 5) புருஷபுரம் | E டில்லி |

(1) CDEBA (2) CDEAB (3) CEDBA (4) DAEBC (5) DEABC ( )

❖ **21-25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்புக்கு பொருந்தாதுள்ளது அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

21. புராதன இந்திய வரலாற்றை உருவாக்குவதிற் சாசனங்களின் முக்கியத்துவம்
    (1) கால நிர்ணயத்திற்கு எழுத்து முறைகளை அவற்றின் மூலம் அறியமுடிகின்றது.
    (2) குறிப்பிட்ட காலத்தின் எழுத்து முறைகளை அவற்றின் மூலம் அறியலாம்.
    (3) அவற்றில் எப்பொழுதும் ஆக்கபூர்வமான சரியான விடயங்கள் காணப்படும்.
    (4) அவை பிரதான இடங்களை அடையாளம் காண்பதற்கு உதவும்.
    (5) அரசுகளின் எல்லைகளை வரையறை செய்வதற்கு அவை உதவி புரிகின்றன. ( )

22. கி.மு 6ஆம் நூற்றாண்டின் கண இராச்சியங்கள்
    (1) கண இராச்சியத்தின் தலைவன் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டமை.
    (2) வழமை பற்றிய புத்தகங்களின் அடிப்படையில் தண்டனைகள் வழங்கப்பட்டன.
    (3) நீதிபரிபாலனம், நிர்வாகம் தொடர்பான விடயங்களை சபைகளே நிறைவேற்றின.
    (4) தீர்மானங்கள் பெரும்பான்மையிரால் மேற்கொள்ளப்பட்டன.
    (5) சபையினை நடாத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையினர் சமூகமளிக்க வேண்டும்.( )

23. முதலாம் பாண்டியப் பேரரசு
    (1) கி.பி 670 இற்கும் கி.பி 920இற்கும் இடைப்பட்டதாகும்.
    (2) இக்காலத்தில் மதுரை தலைநகரமாக விளங்கியது.
    (3) இப்பரேரசின் தலை சிறந்த அரசனாக ஸ்ரீமாற ஸ்ரீ பல்லவன் விளங்கினான்.
    (4) ஜடவர்மன் சுந்தரபாண்டியன் புதிய கட்டடக்கலையை அறிமுகம் செய்தான்.
    (5) முதலாம் சேனன் மன்னன் காலத்தில் பாண்டியர்கள் இலங்கையை ஆக்கிரமித்தனர்.( )

24. இருக்கு வேதகாலம்
    (1) சமுதாயம் கோத்திர நிலையில் காணப்பட்டது.
    (2) இயற்கையை தெய்வமாக வழிபட்டனர்.
    (3) விதவைகள் மறுமணம் செய்வதற்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது.
    (4) விவசாயத்துடன் விலங்கு வளர்ப்பும் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாகக் காணப்பட்டன.
    (5) தந்தை வழிச் சமூக அமைப்புக் காணப்பட்டது. ( )

25. குப்தரின் நிர்வாகம்

(1) பரம்பரை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சி முறையாகும்.

(2) அரசு முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை.

(3) அரசனே அரசினதும் நிர்வாகத்தினதும் அதிபனாக விளங்கினான்.

(4) மந்திரிசபை மந்திரிபரிஷத் எனும் பெயரில் இயங்கி அரசனுக்கு உதவியது.

(5) இராணுவப்படை தரம், பரம்பரை, அகம்படி எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்திருந்தது. ( )

❖ **26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A),(B),(C),(D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை/ விடைகளைத் தெரிவுசெய்க.**

**(A)யும் (B)யும் மட்டும் சரியாயின் 1 எனவும்**

**(A)யும் (C)யும் மட்டும் சரியாயின் 2 எனவும்**

**(B)யும் (C)யும் மட்டும் சரியாயின் 3 எனவும்**

**(C)யும் (D)யும் மட்டும் சரியாயின் 4 எனவும்**

**வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A)யும் (B)யும் மட்டும் சரி | (A)யும் (C)யும் மட்டும் சரி | (B)யும் (C)யும் மட்டும் சரி | (C)யும் (D)யும் மட்டும் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் |

26. இராஷ்டிரகூடர்

(A) இராஷ்டிர கூடர் வம்சத்து முதல் மன்னன் தந்தி துர்க்கன்

(B) மூன்றாம் கிருஷ்ணனின் ஆட்சிக் காலத்தில் இராஷ்டிரகூடரின் ஆதிக்கம் உச்சநிலையை அடைந்தது.

(C) தக்கிணத்தில் சாளுக்கியரின் தளர்ச்சியடைய இராஷ்டிரகூடர் எழுச்சி பெற்றனர்.

(D) சுன்னோசியின் ஆதிக்கத்தின் பொருட்டு இவர்கள் பாலர், கூர்ஜபிரதிகாரர் ஆகியோருடன் போரிட்டனரர். ( )

27. சாளுக்கியர்கள்

(A) சாளுக்கிய மன்னன் 2ஆம் புலிகேசி வடபகுதியில் பம்பாய்க்கு அருகில் பூரித்தீவை இணைத்துக்கொண்டான்.

(B) இந்தியா மீது படையெடுத்து வந்த அராபியரைத் சாளுக்கியர்கள் துரத்தினார்கள்.

(C) முதலாம் ஜயசிங்க என்பவர் சாளுக்கியரின் முதலாவது ஆரம்ப ஆட்சியாளன் ஆவார்.

(D) இரண்டாம் நரசிங்கவர்மன் 2ஆம் புலிகேசியைக் கொலைசெய்தான். ( )

28. சகர்கள்

(A) இவர்கள் போலன் கணவாய் ஊடாக இந்தியாவுக்குள் நுழைந்தனர்.

(B) தட்சசீலத்தை மையமாகக் கொண்டு ஆட்சிசெய்த இவர்களது முதலாவது ஆட்சியாளன் நாகபாணன் ஆவார்.

(C) இந்த வம்சத்தின் தலை சிறந்த ஆட்சியாளன் உருத்திரதாமன் ஆவார்.

(D) இவர்கள் ஆட்சியின் மத்திய நிலையங்கள் மூன்றாகும். ( )

29. ஸ்கந்தகுப்தன்

(A) ஸ்கந்தகுப்தன் ஹுணரின் படையெடுப்புக்களில் இருந்து இந்தியாவைப் பாதுகாத்தான்.

(B) பெருமழையால் பழுதடைந்த சுதர்சன தடாகத்தினை புனரமைத்தான்.

(C) இவன் இறந்ததும் குப்தபேரரசினை மிஹிராகுல என்பவன் கைப்பற்றிக்கொண்டான்.

(D) ஸ்கந்தகுப்தனின் பின்னர் விஷ்ணு குப்தன் ஆட்சிபீடம் ஏறினான். ( )

30. வீரகாவியங்கள்

(A) மகாபாரதம் பிந்திய வேதகாலத்தில் அதன் இறுதி வடிவத்தைப் பெற்றது.

(B) இராமாயணம் எழுதப்பட முன்னரே மகாபாரதம் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது.

(C) இராமாயணம் வால்மீகி முனிவரால் எழுதப்பட்டது.

(D) மகாபாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான போர்கள் விளக்கப்பட்டுள்ளன. ( )

❖ **31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

31. சோழரது கிராமிய நிர்வாகத்தில் மிகச்சிறிய அலகு எவ்வாறு அழைக்கப்பட்டது.

(1) வளநாடு (2) கூற்றம் (3) நாடு (4) ஊர் (5) வாரியம் ( )

32. இராமர்சரிதை நூலின் ஆசிரியர் யார்

(1) கல்கணார் (2) பானாபட்டர் (3) சந்தியாநந்தி (4) பத்மகுப்தர் (5) காளிதாசன்( )

33. ஹரப்பா நாகரிகத்தின் பிரதான வர்த்த நகரமாகத் திகழ்ந்த நகரம்

(1) லோத்தால் (2) சங்குதரோ (3) ரூபார் (4) கலிபன்கன் (5) ரகிகார்ஹி ( )

34. வடமேற்கு இந்தியாவில் சகர்களுக்கு பின்னர் ஆட்சியமைத்த அரச வம்சத்தின் பெயர்

(1) பார்த்தியர்கள் (2) குஷாணர்கள் (3) சாதாவாகனர்

(4) சுங்கர்கள் (5) இந்தோ – கிரேக்கர்கள் ( )

35. கூர்ஜர பிரதிகாரரின் ஆரம்ப ஆட்சியாளன் யார்

(1) மகேந்திரபாலன் (2) தந்திதுர்கன் (3) மஹிபாலன்

(4) ஹரிச்சந்திரன் (5) முதலாம் நாகபட்டா ( )

❖ **36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச்சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1,2,3,4,5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குதாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| 36 | கி.பி 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் 11ஆம் நூற்றாண்டு வரை தக்கிணம் சாளுக்கியர்களின் கீழ் இருந்தது. | சாளுக்கியர் மேற்கு அரச வம்சம், கிழக்கு அரச வம்சம் என முக்கிய இரு பிரிவாக ஆட்சி அமைத்தனர் | ( ) |
| 37 | ராஜதரங்கினி கஷ்மீர் வரலாற்றைக் கூறுகின்றது | ராஜதரங்கினி நூலின் ஆசிரியர் பாணினி ஆவார். | ( ) |
| 38 | குஷாணர் காலத்தின் கலைமரபுகளில் அமராவதி ஒன்றாகும். | கிருஷ்ணா நதிப்பள்ளத்தாக்கில் அமராவதி அமைந்திருந்தது. | ( ) |
| 39 | புருரவ(Porus) மன்னனின் கடுமையான எதிர்ப்பினால் அலெக்சாண்டரால் பியஸ் நதியைக் கடக்க முடியவில்லை | அலெக்சாண்டர் தனது நாட்டிற்கு திரும்பிச்சென்ற பொழுது பாரசீகத்தில் உள்ள பகைவன் ஒருவனால் கொல்லப்பட்டான். | ( ) |
| 40 | மெகஸ்தினிசினுடைய இன்டிகா மோரியரின் ஆட்சி பற்றிக் கூறும் ஒரு முக்கியமான ஒரு மூலாதாரமாகும். | மெகஸ்தனிஸ் சந்திரகுப்த மௌரிய மன்னனின் அரசசபையில் இருந்த கிரேக்க நாட்டுத் தூதுவன் ஆவார். | ( ) |

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தர நிலையறி பரீட்சை – 2021

**தரம் :- 13(2021)** **இந்திய வரலாறு - II (பகுதி II)**

**(புதிய பாடத்திட்டம்)** **25A/T/II**

**அறிவுறுத்தல்கள்**

- **முதலாம்** வினா கட்டாயமானதாகும். முதலாம் வினாவுக்கும் B,C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து மேலும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.
- முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.
- முதலாம் வினாவிற்கு விடையளிக்க இந்தியாவின் புறவுருவப்படம் வழங்கப்படும்.

### பகுதி A

01 உமக்கு வழங்கப்பட்டுள்ள இந்திய புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா விடயங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | |
|---|---|
| (I) ஹரப்பா | (VII) விந்தியமலை |
| (II) தக்ஷசீலம் | (VIII) தாமிரலிப்தி |
| (III) மக்ரான் கணவாய் | (IX) மதுரை |
| (IV) கிருஷ்ணா நதி | (X) சுப்பராக |
| (V) பிரயாக | (XI) தஞ்சாவூர் |
| (VI) ஜகோள் | (XII) பிரதிஷ்ரான் |

(12 புள்ளிகள்)

சரியாகக் குறித்துப் பெயரிடப்படும் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் வழங்கப்படும்.

### பகுதி B

02 இந்திய வரலாற்றினை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய புவியியற் காரணிகளை ஆராய்க. (16 புள்ளிகள்)

03 பிந்திய வேதகாலத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

04 மோரியர் ஆட்சியின் நிர்வாகக் கட்டமைப்பின் பிரதான அம்சங்களை ஆராய்க. (16 புள்ளிகள்)

05 பின்வரும் தலைப்புக்களுள் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவத்தினை பரிசீலனை செய்க.

(I) அசோகனின் தர்மக் கொள்கைகள்

(II) சுங்க வம்சம்

(III) கி.மு 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவின் சமய நிலைகள்

(IV) ஹரப்பா நாகரிகத்தின் கலாசாரம் (8 X 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

06 தக்கிணத்தில் சாதவாகன மன்னர்கள் ஏற்படுத்திய சாதனைகளை விளக்குக. (16 புள்ளிகள்)

07 "இரண்டாம் சந்திரகுப்தன் ஆட்சிக் காலத்தில் குப்தப்பேரரசு மிகவும் உன்னதமான நிலையை அடைந்திருந்தது."

(I) இரண்டாம் சந்திரகுப்தனின் முன்னர் ஆட்சி புரிந்த மன்னன் யார்? (1 புள்ளி)

(II) இரண்டாம் சந்திரகுப்தன் பெற்றுக்கொண்ட இரண்டு பட்டப்பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(III) இரண்டாம் சந்திரகுப்தனைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் மூன்று தொல்பொருள் மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(IV) இரண்டாம் சந்திரகுப்தன் காலத்தில் குப்த பேரரசு அதி உன்னத நிலையை அடைந்தமைக்கான காரணங்களை அவனது அரசியல் பண்பாட்டுச் சாதனைகளின் அடிப்படையில் விளக்குக. (10 புள்ளிகள்)

08 தென்னிந்திய வரலாற்றில் பல்லவர்களின் பங்களிப்பினை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

(I) பல்லவ மன்னர்களின் ஆட்சிச் சிறப்புக்கள்

(II) பல்லவர்களது பண்பாடு (8 X 2 = 16 புள்ளிகள்)

09 பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்றுச் சிறப்புப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(I) பாலவம்சம்

(II) கனிஷ்க மன்னன்

(III) சிந்து பிரதேசத்தினை அராபியர் கைப்பற்றல்

(IV) சோழர்களின் பண்பாட்டு எழுச்சி (8 X 2 = 16 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**தரம் :- 13(2021)** **இந்திய வரலாறு 25A/T/II**

**வினா இல :- 01** **பெயர் / சுட்டெண் ............................**

